# முரசொலி

பக்கங்கள் நான்கு — விலை ரூபா 5.00

மாசு 06 ஒலி 40 பிரசோற்பத்தி மார்கழி 22 — 06 01 1992 திங்கள்


## 'தமிழர் தாயகம்' பதத்தை ஜே. ஆர். நிராகரித்தார்!

"பாரம்பரிய தமிழர் தாயகம் என்ற பதம் இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படவில்லை. ராஜீவ் காந்தியின் சம்மதத்துடன் தான் அதை நீக்கியிருந்தேன்"

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தன மடிகேயன்வெசிய மஹாநாயக்க தேரோவுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதியால் கைச்சாத்திடப்பட்ட இலங்கை -இந்திய ஒப்பந்தத்தில் தமிழர் தாயகம் என்றபதம் குறிப்பிடப்பட்டிருந்தது என அத்தேரோ பத்திரிகைகளுக்கு

— 04 ஆம் பக்கம் பார்க்க

# தொண்டமான் சமரசத் திட்டத்தை இந்தியா குழப்ப முயற்சி!

### மத்திய புலனாய்வுத்துறை தீவிரம்

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான திரு. தொண்டமான் தமது சமரச முயற்சிகளைக் கைவிடச் செய்யக் கூடிய முயற்சிகளில் இந்தியா இறங்கியுள்ளதாகத் தெரியவந்திருக்கிறது.

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியின் கொலையுடன் விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தொடர்புபடுத்தி அதை ஒரு பயங்கரவாத இயக்கமெனப் பிரகடனப்படுத்த முயற்சிகள் நடைபெறுவதாக ராஜதந்திர வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'ஐலண்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் பயங்கரவாதிகள் என்று அவர்களைச் சிக்கலுக்குள் மாட்டிவிடக்கூடிய விதத்தில் இந்திய புலனாய்வுத் துறையினர் செயற்பட்டு வருவதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்ததாக அப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் இயக்கத்தைப் பயங்கரவாத இயக்கமாகப் பிரகடனப்படுத்துவதன் மூலம் தொண்ட

— 04 ஆம் பக்கம் பார்க்க

## கிழக்கு கரையோரங்களில் சிங்கள மீனவக்குடியேற்றம்

திருகோணமலை கடற்கரையோரம் முழுவதும் சிங்கள மீனவர்கள் குடியமர்த்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை 12ஆயிரம் மீனவர் குடும்பங்கள் இவ்வாறு குடியேற்றப்பட்டுள்ளன. இதே போன்று மட்டக்களப்பு கரை

— 04 ஆம் பக்கம் பார்க்க

## கதாநாயகனாக முயற்சிக்கிறார்

### காமினிஜயசூரியா

சிங்கள மக்களின் உரிமைகளையும் நலன்களையும் பாதுகாப்பதற்கென முன்னாள் அமைச்சர் காமினி ஜயசூரியாவினால் ஆரம்பிக்கப்பட்ட சிங்கள பாதுகாப்பு இயக்கத்தில் பல ஆயிரக்கணக்கான சிங்கள மக்கள் அங்கத்தவர்களாகச் சேர முன் வந்துள்ளதாக காமினி ஜயசூரியா கொழும்பு பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.

"தற்போதைய நிலைபற்றி சிங்கள மக்களுக்குத் தெளிவை உண்டாக்கி விழிப்புணர்ச்சியைத் தோற்றுவிக்கவே இந்த இயக்கம் ஆரம்பிக்கப்பட்டதாகக் கூறிய அவர்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## குமண கப்பலில் செல்லவும் நோயாளர் உறவினருக்கு அழைப்பு

16. 12. 91 அன்று யாழ் ஆஸ்பத்திரியில் கொழும்பு வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காகப் பதியப்பட்ட நோயாளர்களின் உறவினர்களை எதிர்வரும் 8 ஆம் திகதி புதன்கிழமை பணிப்பாளர் காரியாலயத்தில் மீள்பரிசீலனை செய்வதற்கு காலை 10 மணிக்கு வருகைதருமாறு பணிப்பாளரினால் கேட்கப்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## நாய்க்கு இராணுவம் சூடு கடைகள் இழுத்துமூடப்பட்டன

வீசர்நாய் ஒன்றைத் துரத்திய படையினர் சரமாரியான துப்பாக்கிப் பிரயோகம் செய்த அப்பகுதியில் நின்ற மக்கள் பதறியடித்துக் கொண்டு ஓடினர். கடைகள் இழுத்து மூடப்பட்டன.

மட்டக்களப்பு நகரில் பயனியர் வீதியில் கடந்த வாரம்

...04 ஆம் பக்கம் பார்க்க

## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுள் "கோழிச் சண்டையாம்!"

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினுள் தற்போது கோழிச் சண்டை நடைபெறுவதாக பி பி ஸி. தேர்ந்து தெரிவித்தது.

அநுரா பண்டாரநாயக்கா தமக்கே ஆதரவு அதிகம் உண்டு எனக் கூறிவருகிறார் தாமே கட்சியின் அடுத்த

...04 ஆம் பக்கம் பார்க்க

## உயர் நீதிமன்றம் தீர்ப்பு இடமாற்றம் இடைநிறுத்தம்

வடகீழ் மாகாண சபையின் கீழ் வவுனியாவில் கடமையாற்றிய மருந்தாளர் ஒருவருக்கு (Pharmacist ஒருவருக்கு விடுக்கப்பட்ட இடமாற்றல் உத்தரவு உயர் நீதிமன்றத்தினால் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது.

வவுனியாவில் கடமையாற்றிய திருமதி பரமேஸ்வரி ஜயதேவன் என்பவருடைய இடமாற்றமே இவ்வாறு இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது.

இவர் தனது அடிப்படை உரிமைகள் மீறப்படுவதாக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் தனக்கு விடுக்கப்பட்டிருக்கும் மாற்றம் வேண்டுமென்றே தன்னை வஞ்சம் தீர்ப்பதற்கென

—04 ஆம் பக்கம் பார்க்க

## மணலாறு சிங்களக் குடியேற்றம் தமிழ் துணைப்படையால் தடுப்பு

மணலாறு மாவட்டத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள் தமிழ் துணை படையினரால் தடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திருகோணமலை-மணலாறு எல்லைப் பகுதியிலிருந்து கொக்குத்தொடுவாய் வரை அமைக்கப்பட்ட சிங்கள குடியேற்றங்கள் பல துணைப் படைகளினால் அழிக்கப்பட்டுள்ளன. அண்மையிலும் இவ்வாறு 4 சிங்கள குடியேற்றங்கள் அழிக்கப்பட்டதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

சிங்கள குடியேற்றங்களுக்கு பாதுகாப்பு வழங்கி வரும் இராணுவத்தினர் மீது தமிழ் துணைப்படையினர் விடுதலைப்புலிகளின் உதவியுடன் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

## கொக்கட்டிச்சோலை

## பதுளைப்பகுதிதோட்டங்களில்

னர்.

— 04 ஆம் பக்கம் பார்க்க

## விசாரணை 9 ஆம் திகதி முடிவு

கொக்கட்டிச்சோலை படு கொலை தொடர்பான விசாரணை ஆணைக்குழுவின் விசாரணைகள் எதிர்வரும் 9 ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

விசாரணையின் இறுதி அமர்வு அன்றைய தினம் களை மட்டக்களப்பு விமான நிலைய வளவில் நடைபெறும். 80 பேர் சாட்சியமளிக்க அழைக்கப்பட்டுள்ளனர். 08

## 150 தமிழ் இளைஞர் மறைவு

கடந்த மூன்று மாதங்களில் மலையகத்திலுள்ள 17 தோட்டங்களில் இருந்து சுமார் 150 தமிழ் இளைஞர்கள் காணாமற்போயுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பதுளை மாவட்டத்திலுள்ள தெமோதர, இவுன்ட் ஹிந்தகல, கலகல, நாகவெல, சவரக்கெலி, கோணேகெல, காஹவரல்ல, தென்னகும்பர, ஹில்டேசப், யூரி, பின்காரஜ, டெமெரியா, தேவகல பசறை ஆகிய தோட்டங்களைச்சேர்ந்த இளைஞர்களே இவ்வாறு காணாமற்போனதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் மொனராகலை

— 04 ஆம் பக்கம் பார்க்க

## பதியப்படாத நிதி நிறுவனத்தின் பணிப்பாளர்களின் கடவுச்சீட்டு பறிமுதல்

கொழும்பில் இயங்கிவரும் 'தாரகா' தனியார் நிதி நிறுவனத்தின் பணிப்பாளர்கள் நாட்டைவிட்டு வெளியேறாவண்ணம் அவர்களது கடவுச்சீட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகச் செய்தி வெளிவந்துள்ளது.

மேற்படி சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, குறிப்பிட்ட நிதி நிறுவனம் நிதிசகம்பெனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லையென்றும், மேற்படி சட்டத்தின் விதிமுறைகளுக்கு அமைய பணவைப்பாளர்களுக்கு அவர்களது முதலீட்டுக்கு வட்டிப் பணம் வழங்காமல் இருந்ததென்றும் இலங்கை மத்திய வங்கி பணிப்பாள

— 04 ஆம் பக்கம் பார்க்க

## தொண்டா நடுநிலை வகிப்பாரா சிங்களப் பத்திரிகை கேள்வி

தொண்டமானின் யாழ் விஜயத்தை அரசு பரிசீலனை செய்யவேண்டும் எனப் பௌத்த மஹா சங்கத்தினர் அரசைக் கேட்டுள்ளதாக 'லங்கா தீப' பத்திரிகை நேற்றுச் செய்தி வெளியிட்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## அரச அதிபர் ஓய்வு

மட்டக்களப்பு அரசாங்க அதிபர் க. தருமலிங்கம் தமது பதவியில் இருந்து ஓய்வு பெறுகின்றார். சுமார் 20 வருட காலம் இவர் மட்டக்களப்பு பகுதியில் நிர்வாக சேவையில் பணிபுரிந்தார். இவர் கரவெட்டியைச் சேர்ந்தவர். 08

## வீரவணக்கம்

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த எழுச்சியன் (கனகரட்ணம் கமலதாசன், சித்தன்கேணி) நேற்று மரணமடைந்தார்.

# தடுப்பூசி மருந்துகளும் கப்பலில் வந்துள்ளன

யாழ் மாவட்டப்பகுதி வைத்தியசாலைகளில் அண்மைக் காலமாக ஏற்பட்டு வந்த ஏற்புத் தடுப்பூசி மருந்து, ஏ. ஆர். வி போன்றன குமண கப்பலில் எடுத்து வரப்பட்டு நேற்று முன் தினத்திலிருந்து பல பகுதிகளிலுள்ள வைத்திய சாலைகளில் நோயாளர்களுக்கு ஏற்றப்பட்டு வருகின்றன.

யாழ் போதனா வைத்திய சாலையிலும் ஏ ஆர் வி, ஏற்புத் தடுப்பூசி மருந்துகள் நேற்றிலிருந்து அனேக நோயாளர்கட்கு ஏற்றப்பட்டு வருகின்றன.

சுமார் 1½ மாத காலமாக இவ் ஊசி மருந்துகள் இன்றி பல நூற்றுக்கணக்கான நோயாளர்கள் பாதிப்புற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (07)

## யாழ்நகர் நோக்கி சூடு

மண்டைதீவுப் பகுதியிலிருந்து படையினர் யாழ்ப்பாணக் கடற்கரைப் பகுதிகளை நோக்கி நேற்று முன்தினம் மாலை துப்பாக்கிப் பிரயோகத்தினை மேற்கொண்டனர். (07)

# தமிழகத்திலுள்ள அமைதி கர்நாடகத்தில் இல்லை

-மந்திரி

கர்நாடகாவில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நஷ்டஈடு வழங்குமாறு அம் மாநில அரசை மத்திய அரசு கோரியுள்ளது.

இத்தகவலை சென்னையில் மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் வெளியிட்டார்.

இவ் விவகாரத்துக்குப் பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காண முடியும் என்றும் அவர் கருத்து வெளியிட்டார்.

தமிழகத்தில் கடைப்பிடிக்கப்படும் அமைதி கர்நாடகத்தில் இல்லை எனவும் அவர் சொன்னார்.

# செஞ்சிலுவை பிரதிநிதிகள் தீவுப்பகுதிக்கு விஜயம்

தீவுப்பகுதியில் இராணுவத்தினரின் பிடிக்குள் சிக்கியிருக்கின்ற மக்களின் நிலைமைகள் பற்றி தெரிந்து கொள்ளுமுகமாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப்பிரதிநிதிகள் இம் மாத இறுதியில் அப்பகுதி செல்ல உள்ளனர்.

கொழும்பில் உள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்க உயர்மட்டப் பிரதிநிதிகள் இராணுவக் கூட்டுத் தலைமையகத்துடனும், அரசுடனும் பேச்சுவார்த்தை நடாத்தியதன் பயனாக அங்கு செல்லவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (07)

## ராஜீவ் கொலை விசாரணை

# சிங்கப்பூர்உதவியைநாடுகிறது இந்தியா என அறிவிப்பு

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை தொடர்பான சந்தேக நபர்களைக் கைது செய்ய உதவுமாறு இந்தியா சிங்கப்பூரைக் கோரியுள்ளது.

சிங்கப்பூர் சென்றுள்ள சி. பி. ஐ பிரிவுப் பிரதி பொலிஸ்மா அதிபரான எமோட்டாங் இச் சம்பவம் தொடர்பாகச் சிங்கப்பூர் பொலிஸ் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அப்போது ராஜீவ் கொலை தொடர்பான விபரங்களைச் சிங்கப்பூர் அதிகாரிகளுடன் பரிமாறிக் கொண்டாராம்.

# நரசிம்மராவ்-ஹரல்ட்ஹேரத் டிக்ஸிற் - பேர்னாட் திலகரத்ன

## புதுடில்லியில் பேச்சுவார்த்தை ஏற்பாடு

தற்போது புதுடில்லி விஜயம் மேற்கொண்டுள்ள ஸ்ரீலங்கா வெளிவிவகார அமைச்சர் ஹரல்ட் ஹேரத் இவ்வாரம் இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவார் என்று நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை ஸ்ரீலங்கா வெளிவிவகாரச் செயலர் பேர்னாட் திலகரத்ன, இந்திய வெளிவிவகார செயலர் ஜே. என். டிக்ஸிற்றுடன் இருதரப்பு உறவுகள் மற்றும் 'சார்க்' விவகாரங்கள் குறித்து உரையாற்றுவார் என்றும் அறிவிக்கப்படுகின்றது.

இரு நாடுகளுக்கும் இடையிலான சமூக, பொருளாதார, கல்வி, கலாசார விடயங்கள் குறித்து பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கென ஹேரத், திலகரத்ன குழு சனிக்கிழமை இரவு புதுடில்லி சென்றுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

# முல்லை வங்கியிலிருந்து ஆவணங்களை மீட்கஏற்பாடு

முல்லைத்தீவு இலங்கை வங்கியில் உள்ள ஆவணங்களை மீட்கும் பணியில் வங்கி உத்தியோகத்தர்கள் ஆறுபேர் ஈடுபட்டுள்ளனர்.

வவுனியாவில் இது குறித்து பேச்சுவார்த்தை நடைபெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 18 மாதங்களாக இராணுவப் பிடிக்குள் முல்லைத்தீவு இலங்கை வங்கிக் கிளை இருந்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

இதனால் இந்த வங்கியின் வாடிக்கையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வந்ததும் குறிப்பிடத்தக்கது. (08)

# என்.எம்.பெரேரா நினைவுச் சிலை கொழும்பில் அமைக்க ஏற்பாடு

லங்கா சமசமாஜக் கட்சியினர், மறைந்த தங்கள் கட்சித் தலைவரும், பலவருட காலமாக நிதிமந்திரியாக இருந்தவருமான, கலாநிதி என். எம். பெரேராவின் உருவச்சிலை ஒன்றை கொழும்பு நகரில் நிறுவுவதற்கான ஏற்பாடுகளை இப்போது செய்து வருகின்றனர்.

லங்கா சமசமாஜக் கட்சியினர் கோரியதன் பேரில், கொட்டா றோட்டிலுள்ள பூங்காவிற்கு அருகில், கொழும்பு மாநகரசபைக்குச் சொந்தமான காணித் துண்டு ஒன்றை, மாநகர சபை மேயர் திரு. ரட்ணசிறி ராஜபக்ச இலவசமாக வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்.

## ★ வலுக்கிறது சு. கட்சி உட்பூசல்

## பண்டா குடும்ப தலைமைப் போட்டி;

# இரு எம். பிக்கள் பகிரங்க கண்டனம்!

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் தோன்றியுள்ள கருத்து வேறுபாடுகள் மேலும் விரிவடைந்து வருவதாக கொழும்புத் தகவல்கள் நேற்றுத் தெரிவித்தன.

இக் கட்சியின் எம். பிக்களும், உறுப்பினர்களும் பகிரங்கமாகத் தொடுத்துள்ள சொற்போர் உட்கட்சி மோதலை வலுப்படுத்தி வருகின்றனவாம்.

பண்டாரநாயக்கா குடும்ப அங்கத்தவர்கள் தலைமைப் போட்டியில் ஈடுபட்டிருப்பது குறித்து இக் கட்சி எம். பிக்கள் இருவர் பகிரங்கமாகவே அறிக்கைகளை விடுத்தனர்.

கட்சிக்குள் வளர்ந்து வரும் அபிப்பிராய பேதங்களுக்குத் தீர்வுகாண்பது சாத்தியமற்றது. ஏனெனில் இவ் விவகாரத்துக்கு மூலகாரணமே தலைமைப் பதவிக்கும் போட்டா போட்டி தான் என்று கட்சியின் அங்கத்தவர் ஒருவர் கூறியுள்ளார்.

### அனுராவுக்கு புதிய சவால்கள்

இதேவேளை கட்சிக்குள்ளிருந்தே அனுரா பண்டாரநாயக்காவுக்குப் புதிய சவால்கள் விடுக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நவம்பரில் நடைபெறவிருந்த சார்க் மாநாடு குறித்து ஒருநாள் விவாதம் ஒன்று பாராளுமன்றத்தில் நடாத்தப்பட வேண்டுமென்று கட்சியின் தேசிய அமைப்பாளர் அனுரா பண்டாரநாயக்கா விடுத்த கோரிக்கை அச்சுறுத்தலை மீண்டும் விடுக்குமாறு கட்சியின் சில சிரேஷ்ட அங்கத்தவர்கள் இப்போது சவால் விடுக்கத் தொடங்கியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## ஐ. நா. சங்கம் நடாத்தும்

# சுற்றாடல் சூழல அபிவிருத்திபற்றி புகைப்படப் போட்டி

ஆனி மாதம் 5 ஆம் திகதியை உலக சுற்றாடல், சூழல் தினமாக ஐ. நா. சங்கம் பிரகடனப்படுத்தியுள்ளது.

1992 ஆம் ஆண்டு ஆனி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 12 ஆம் திகதி வரை சர்வதேச சுற்றாடல், சூழல் அபிவிருத்தி பற்றிய மாபெரும் கருத்தரங்கு றியோடி ஜெனறியோவில் நடைபெறவுள்ளது.

சுற்றாடல், சூழலை எவ்வகையில் பாதுகாப்பது என்பதை வருங்கால சந்ததியினருக்கு எடுத்துக்காட்டாக அமையும் வண்ணம் இந்த மகாநாடு இருக்கும் என ஐ. நா. சங்க யாழ் பிரிவுத் தலைவர் டாக்டர் நடேசலிங்கம் கதிர்காமநாதன் விடுத்த செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாகச் சர்வதேச ரீதியில் புகைப்படப் போட்டியொன்றும் நடைபெறவுள்ளது.

இந்தப் புகைப்படப் போட்டியில் பங்குபற்றுபவர்கள் சுற்றாடல், சூழல் மாசுபடுவதையோ அல்லது அபிவிருத்தியடைவதையோ பிரதிபலிக்கும் வண்ணம் புகைப்படங்கள் எடுத்து அனுப்புதல் வேண்டும் எனவும் தெரிவித்த டாக்டர் கதிர்காமநாதன் இதற்காக மிகப் பெறுமதி வாய்ந்த பரிசுகள் அளிக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இப் போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் மேலதிக விபரங்களுக்கு ஐ. நா. சங்க யாழ்ப் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## யார் இந்த வயோதிபர்?

கோப்பாய் வடக்கு மயானத்தில் அடையாளம் காணப்படாத சடலம் ஒன்று காணப்பட்டது.

சுமார் 60 வயது மதிக்கத்தக்க கறுப்பு நிறமுடைய இவரது உயரம் 5' 6'', முழுக்கை சேட்டும், வேட்டியும் அணிந்துள்ளார்.

மேலதிக விவரங்களுக்குக் கோப்பாய் காவல் பணிமனையுடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்படுகின்றது.

# பிரதேச செயலகம் அமைந்தது

வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் அலுவலகத்திலும் நிர்வாக பரவலாக்கல் திட்டத்தின் கீழ் வடக்கு கிழக்கு மாகாணசபை பிரதேச செயலகம் இயங்கத் தொடங்கியுள்ளது.

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக திறப்பு விழாவை வடமராட்சி கிழக்கு (மருதங்கேணி) உதவி அரசாங்க அதிபர் திரு க. வேதீஸ்வரன் மங்கல விளக்கேற்றி பெயர்ப் பலகையைத் திரை நீக்கம் செய்து ஆரம்பித்து வைத்தார்.

இவ் விழாவிலே அரச திணைக்களங்களின் அதிகாரிகள், சமூகசேவை நிறுவனங்களின் பிரதிநிதிகள், பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இப் பிரதேச செயலகத்தில் முதன் முதலாக பிரதேச விவசாயக்குழுக் கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்தில் இவ்வாண்டு இப் பிரதேச செயலகப் பகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்திகள் பற்றிக் கலந்துரையாடப்பட்டன. (11)

# 'தம்பி கருணாநிதி முடிவுரை எழுதுவான்' அண்ணா அன்று சொன்னது இன்று பொருத்தமாகக் கூடாது

**-கல்கியின் ஆலோசனை**

"அண்ணா ஒரு முறை கூட்டத்தில் முன்னதாகவே பேசிவிட்டுச் செல்ல வேண்டியிருந்தது. அப்போது அவர் சொன்னார் "நான் முன்னுரை தான் வழங்கினேன். தம்பி கருணாநிதி முடிவுரை எழுதுவான் என்று அது அந்தக் கூட்டத்தோடு நிற்க வேண்டிய கருத்து. இன்றைய தி. மு. கவுக்கே பொருந்தும் கருத்தாக மாறி விடக்கூடாது."

இவ்வாறு தமிழக பிரபல வார இதழ்களில் ஒன்றான 'கல்கி' தி. மு. க தலைவர் கலைஞர் மு கருணாநிதிக்கு ஆலோசனை கூறியுள்ளது.

"உடனடியாக விழித்துக் கொண்டு செயலாற்ற வில்லையானால் கருணாநிதி ஆரோகணித்திருக்கும் குதிரைத் தேர்தலையொட்டி, நோஞ்சானாகிப் போன - தி. மு. க குதிரை மேலும் பலவீனப் பட்டுப் போகும். அதற்கு உடனே போஷாக்குக் கொடுத்தும் பலப்படுத்த வேண்டும்.

மக்கள் துயரை அரசுக்கு எடுத்துரைத்துப் பரிகாரம் காண்பதில் தி. மு. க எதிர்க்கட்சி என்றிருந்தபோது எந்தளவுக்குச் செயற்பட்டிருக்கிறது என்று நோக்கின் ஏமாற்றம் தான். இதிலெல்லாம் கவனம் செலுத்தாமல் பழைய துருப்பிடித்த ஆயுதமான பிராமண எதிர்ப்பை மறுபடி எடுத்துக் கொண்டிருக்கிறார் கலைஞர். திராவிட இயக்கம், மறுமலர்ச்சி மன்றம் என்றெல்லாம் பேசுகிறார். இதுவா மக்களைக் கவரும் வழி? மக்கள் முன் உள்ள பிரச்சினை இன்று இவையா? உள்ளதும் போச்சே என்ற நிலை உருவாகத்தான் இந்தப் போக்கு உதவுமேயன்றி பயன் தராது.

காலம் மாறி விட்டது மக்களின் மனப்பான்மையும் மாறியிருக்கிறது. 'பார்ப்பனரை எதிர்க்கவில்லை. பார்ப்பனியத்தை எதிர்க்கிறோம். என்பதற்கும் 'செத்த பாம்பை அடிக்கிறோம் என்பதற்கும் இடையில் வித்தியாசம் இல்லை: இவை கேட்டுக் கேட்டு அலுத்து விட்ட, பழைய உளுத்துப் போன வாதங்கள்.

தெய்வத்தை மறுத்தும், பழித்தும், ஒரு சாராரை இழிவு படுத்தியும் மக்களைக் கவர முடியும் என்பது இனி நடக்கிற காரியமே அல்ல. கலைஞர் தம் கருத்தை மாற்றிக் கொள்ள வேண்டாம். ஆனால் அதைத் தமது கட்சியில் பிறர் மீது திணிக்காமலாவது இருக்கலாம். இதனால் மக்கள் மன்றத்தில் கட்சியின் செல்வாக்குப் பாதிக்கப்படுகின்றது."

# இலங்கைத் தமிழர்களுக்கு நியாயமான சுயாட்சி!

## மார்க்-கம்யூனிஸ்ட் வலியுறுத்து

"இலங்கைத் தமிழர்களுக்கு நியாயமான சுயாட்சி வேண்டும்" என்று இந்திய மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தெரிவித்துள்ளது

"ஐக்கிய இலங்கைக்குள் தமிழர்களுக்கு அவர்களது உரிமைகள் வழங்கப்படுவதோடு நியாயமான சுயாட்சியும் வழங்கப்படவேண்டும் என எமது கட்சியும், இந்தியாவும் கருதுகின்றன" என்று சென்னையில் நடைபெற்ற இக்கட்சியின் 14 வது வருடாந்த மாநாட்டில் பிரதம பேச்சாளராகக் கலந்து கொண்டு உரையாற்றிய ஹர்கிஷன் சிங் சுர்ஜித் தெரிவித்தார்.

## கரபந்தாட்டம்

ஷப்றா நிறுவனத்தின் அனுசரணையுடன், அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் அமரர் மு.சிவரெத்தினம் அவர்களின் ஞாபகார்த்த கரபந்தாட்டப் போட்டி எதிர்வரும் 10-ம் திகதி மாலை 4 மணிக்கு காசிப்பிள்ளை விளையாட்டரங்கில் ஆரம்பமாகவுள்ளது

சர்வதேச விதிகளுக்கு அமைய 'செற்அப்' முறையில் நடைபெறவுள்ள இப்போட்டியில் சென்றலைற், காங்கேசன்துறை, சென்அன்ரனீஸ், தம்பசிட்டி, அரியாலை, பாரதி, ஆவரங்கால் புத்தூர், மோகனதாஸ், சென்றோக்ஸ் ஆகிய கழகங்களின் அணிகள் பங்குபற்ற உள்ளன.

10 ஆந் திகதி இடம்பெறவுள்ள ஆட்டங்களில் மோகனதாஸ் 'பி' பிரிவு அணியை எதிர்த்து சென் றோக்ஸ் அணியும் மோகனதாஸ 'ஏ' பிரிவு அணியை எதிர்த்து சென்றலைற்ஸ் அணியும் ஆடவுள்ளன.

இப்போட்டி சிறப்பாக அமைவதற்கான சகல ஏற்பாடுகளையும் யாழ் கரபந்தாட்ட சம்மேளன உப தலைவர் எஸ். கே இராசரெத்தினம் செய்து வருகிறார்.

## கிரிக்கெட்

வீரவேங்கை மேஜர் அன்ரனின் ஞாபகார்த்தமாக ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தினால் நடாத்தப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட பந்து மாற்ற மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் நேற்று முன் தினம் காலை ஈச்சமோட்டை விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது இப்போட்டியில், கொக்குவில் வளர்மதி விளையாட்டுக் கழகம் அதனை எதிர்த்து ஆடிய அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை 6 ஓட்டங்கள் வித்தியாசத்தால் வென்று, சாம்பியன் ஆனது.

## விளையாட்டு மைதானம்

இப்போட்டிக்கு நடுவர்களாக திரு. தவச்செல்வன், திரு. ந. அனுரசச் சொக்கன் ஆகியோர் கடமையாற்றினார்கள்,

நிலையத் தலைவர் திரு. ஏ.கனகசபாபதி இப்போட்டியில் முதலாம் இரண்டாம் இடத்தைப் பெற்றவர்களுக்கான பரிசில்களை வழங்கினார், திரு. தவநேசன் நன்றியுரை வழங்கினார்.

## உதைபந்தாட்டம்

அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடாத்தும் அமரர் ஈ. கே. குமரையா ஞாபகார்த்தப் போட்டியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஆட்டங்களில் முதல் ஆட்டத்தில் குருநகர் பாஷையூர் விளையாட்டுக்கழகம் அதனை எதிர்த்து ஆடிய வைக்கிங்ஸ் விளையாட்டுக் கழக அணியை ஆறுக்கு பூச்சியம் என்ற கோல்கள் கணக்கில் தோற்கடித்தது.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது ஆட்டத்தில் பாஷையூர் சென் அந்தனீஸ் அணி, கிறீன்பீல்ட் அணியை 6: 0 என்ற கோல்கள் அடிப்படையில் வெகு இலகுவாக வென்றது.

இப்போட்டிகட்கு மத்தியஸ்தர்களாக திருவாளர்கள் ஜே. நாகேந்திரன், எம். ஜே. விமலதாஸ ஆகியோர் கடமையாற்றினார்கள்.

## வலைப்பந்தாட்டம்

ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தின் அனுசரணையுடன் ஈச்சமோட்டை மகளிர் முன்னேற்றச் சங்கம் நடாத்தி வந்த வீரவேங்கை ஏஞ்சலா ஞாபகார்த்த வலைப்பந்தாட்டப் போட்டியின் இறுதி ஆட்டம் நேற்றுமுன்தினம் ஈச்சமோட்டை விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றபொழுது தெல்லிப்பளை கிறாஸ்கொப்பஸ் அணி, அதனை எதிர்த்து ஆடிய பாஷையூர் சென் அந்தனீஸ் அணியை 20: 14 என்ற புள்ளிகள் கணக்கில் வென்றது.

இப்போட்டிக்குத் தீர்ப்பாளர்களாக திருமதி ஏ எஸ்.றாசசிங்கம், செல்வி மேரிகிறசென்சியா ஆகியோர் கடமையாற்றினார்கள்.

விளையாட்டுத் துறைக்குப் பொறுப்பான கப்டன் டி. ஏ. எம் குணசிங்கம் பரிசில்களை வழங்கினார். (16)

## அன்னை திரேஸா தேறி வருகிறார்

அன்னை திரேஸாவின் உடல் நிலை தேறி வருவதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். அவர் இயல்பு நிலையடையும் நிலை ஏற்படக் கூடியதாக இருக்கும் என அவர்கள் நம்பிக்கை தெரிவித்தனர்

## இலவசமாக மரக்கறி விதை

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையின் அனுசரணையுடன் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குள் இதுவரை 500 பேருக்கு மேற்பட்ட விவசாயிகளுக்கு இலவசமாக மரக்கறி விதைகளை வழங்கியுள்ளது.

மேலும் சிறுதானிய விதைகளும் வழங்கப்பட்டு வருகின்றன. (06)

## உதவிப் பணம்

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள கிராமசேவகர் பிரிவுகளில் ஒக்டோபர் மாத மாதாந்த உதவிப் பணம் வழங்கப்பட்டு வருகிறது.

இதேவேளை இவ்வருட 6-ம் இலக்கத் தொடர் உணவு முத்திரையும் வழங்கப்பட்டு வருகிறது (08)

## அகதிகளுக்கு பாத்திரங்கள்

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அகதிகளாக இருந்து வரும் வெளிமாவட்ட அகதிகளுக்குச் சமையல் பாத்திரங்கள் கரவெட்டி உ. அ அதிபர் பிரிவில் வழங்கப்பட்டது. (08)

## குடியிருப்புக் காணிகள்

வன்னிப் பகுதி மாவீரர் குடும்பங்களுக்குக் கிராமிய உற்பத்திக் குழு குடியிருப்புக் காணிகளை வழங்கி வருகிறது.

மாவீரர்கள், போராளிகள் குடும்பங்களுக்குத் தலா ஒரு ஏக்கர் காணி வீதம் வழங்கப்பட்டு வருகிறது (08)

## ஜி. ஜி. யின் பாரியார் காலமானார்

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ஸ்தாபகர் அமரர் ஜி ஜி. பொன்னம்பலத்தின் பாரியார் திருமதி அழகுமணி பொன்னம்பலம் தனது 85 ஆவது வயதில் கொழும்பில் காலமானார்.

நேற்றைய தொடர்ச்சி

## தமிழீழத்தில் சிறுகைத் தொழிலாளர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்

2. உற்பத்திகளைக் கடனாகப் பெற்று விற்பனை செய்ய முயற்சித்தல்:

இறக்குமதியாகும் பொருள்களுக்கு எத்தனை மடங்கு விலையானாலும் உடன் காசு கொடுத்து (முதலிட்டு) வியாபாரம் செய்ய முயற்சிப்பவர் - உள்ளூர் உற்பத்தி என்றதும் முதலில்லாத வியாபாரம் செய்து லாபம் பெற முயற்சித்தல் மட்டுமன்றி, விற்பனை செய்து வந்த பணத்தை உற்பத்தியாளர்களுக்கு கொடுக்காமல் வேறு கொள்வனவுக்கும் பயன்படுத்தி, மேலும் மேலும் லாபமீட்ட முயற்சிக்கின்றனர்.

இந்த நிலை மாறவேண்டுமானால் வியாபாரிகள் உள்ளூர் உற்பத்திகளை உற்சாகத்துடன் காசுக்குக் கொள்வனவு செய்து, இப்பொருள் எமது உள்ளூர் உற்பத்தி என்று பாவனையாளருக்கு அறிமுகம் செய்து, விளம்பரம் செய்து விற்பனையை அதிகரிக்க வழி செய்ய வேண்டும் உள்ளூர் உற்பத்திப் பொருள்களுக்குப் பதிலீடான இறக்குமதிகளைக் குறைத்து இறுதியில் முற்றுமுழுதாக நிறுத்த முயற்சிக்க வேண்டும்.

இவ்வாறான உள்ளூர் உற்பத்தி ஊக்குவிப்புக்கான உணர்வு ஒருதேசிய உணர்வு மிக்கவனால் மட்டுமே வெளிக்காட்ட முடியும் எமது நாட்டில் நீண்டகாலமாக 40% குறையாத மாணவர்கள் வர்த்தகம், பொருளியல் கற்றறிந்தும் எமது பிரதேச வர்த்தகர்கள் இன்னமும் தேச உணர்வு குன்றிச் செயற்படுவது கவலைக்குரிய விடயம் ஆகும்.

3. உள்ளூர் உற்பத்திகளைக் கொள்வனவு செய்யும் தேச உணர்வு மக்களிடம் வளர வேண்டும்.

பாவனையாளரின் கொள்வனவுக்குரிய பணமானது அவரின் உழைப்பில் வந்தது எனின் அது பெறுமதி மிக்கது அப் பணத்தைக் கொண்டு தனது அத்தியாவசிய தேவையை நிறைவு செய்யக் கொள்வனவு மேற்கொள்ளப்படும். அப் பொருள் அவரின் தேவைகளை நிறைவு செய்யுமானால் அதற்கு நியாயமான விலை கொடுக்கப்படும்.

எனவே நாம் இறக்குமதியாகும் பொருள் என்ற மாயையில் கொள்வனவு செய்யும் பொருளுக்கான பெறுமானத்திலும் பல மடங்கைக் கொடுத்துக் கொள்வனவு செய்யும் நிலை மாறவேண்டும். குறைந்த விலைக்கு உள்ளூர் பொருள் என்றதும், அது தரக்குறைவானது எனும் எண்ணம் மாற

### ச. சுப்பிரமணியம்

வேண்டும். அதுபோலவே இறக்குமதியாகும் பொருளிலும் பார்க்கச் சிறிதளவு விலை உயர்வு என்றாலும் அது உள்ளூர் உற்பத்தி ஊக்குவிப்பு என்பதற்காகவும், எமது பணம் எமது நாட்டிற்குள் திரிய வேண்டும் என்பதற்காகவும் உள்ளூர் உற்பத்தியையே கொள்வனவு செய்ய முயற்சிக்க வேண்டும். உங்களின் தேசிய உணர்வை வெளிக்காட்ட இந்த ஒரு சந்தர்ப்பமாகக் கொள்ள வேண்டும். அது ஒரு குடிமகனின் கடமை என வேண்டுமென்றிக் கணக்கும் பார்த்து நீண்டகால சுயபொருளாதார வளர்ச்சியைப் பாதிக்கச் செய்யலாகாது.

3. அளவுக்கதிகமான விற்பனைத் தரகைப் பெற வியாபாரிகள் பெற முயற்சித்தல்.

ஒரு உற்பத்தியாளன் 40 சதத்துக்கு ஒரு பொருளை உற்பத்தி செய்து லாபம் எல்லாம் வைத்து 45 சதத்துக்கு விற்கச் சென்றால் வியாபாரி அதை மேலும் 30-40% லாபம் வைத்து விற்க முயற்சிக்கும் முறை மாற வேண்டும், இதனால் உற்பத்தியாளனைவிட விற்பனையாளன் அதிக லாபம் பெறுகிறார். விற்பனை விலை அதிகரிக்கிறது பாவனையாளர்கள் கொள்வனவைக் குறைக்கின்றனர். உற்பத்தி தேக்கமடையும். இறுதியில் தொழிலகம் மூடப்படும். இந் நிலை மாறவேண்டும்.

நியாயமான அளவு லாபம் வைத்து விற்பனை செய்ய முயற்சிப்பதால் பாவனையாளர்கள், உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்கள் மூவருமே நன்மை பெறுகின்றார்கள் என்பதையுணரவேண்டும். வியாபாரம் என்பது ஏனையவரை இயன்றளவு சுரண்டல் என்று செயற்படாது மக்கள் சேவை எனக் கொண்டு செய்ய முயற்சிக்க வேண்டும்.

நன்றி: ஆதாரம்

## யாழ்நகர்ப் பகுதிகளில் கட்டாக்காலி நாய்த் தொல்லை

யாழ் நகர்ப்பகுதிகளில் கட்டாக்காலி நாய்கள் அதிகரித்துள்ளன, இதனால் பாதசாரிகள் சிரமப்பட வேண்டிய நிலைக்குள்ளாகியிருக்கின்றனர்,

யாழ் ஆஸ்பத்திரியிலும் நாய்கள் அதிகரித்துக் காணப்படுவதால் தொல்லைகள் அதிகரித்துள்ளன.

இரவு நேரங்களிலேயே நாய்கள் தொந்தரவு மிகமோசமாக உள்ளது. கட்டாக்காலி நாய்கள் அதிகரித்திருப்பதனால் தினமும் பலர் அதன் கடிக்குள்ளாகி வருகின்றனர். (07)

